கனம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.
முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

2026–ம் வருடம் பிப்ரவரி மாதம் 12ம் தேதி வியாழக்கிழமை
இடைநிலை மனு எண்.4/2025
இன்
அசல் வழக்கு எண்.39/2018
* * * *

1. ஹேமலதா
2. சத்திய விதுரர் ... மனுதாரர்கள்/வாதிகள்

/ எதிர்/

1. தங்கேஸ்வரன் (இறப்பு) ... 1ம் பிரதிவாதி
2. மீனாட்சி
3. நாகேந்திரன்
4. கற்பகம்
5. திருமுருகன் ... 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/
2 முதல் 5 பிரதிவாதிகள்

இம்மனுவானது 07.02.2026–ல் இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.அடைக்கலம் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.பொன்னம்பலம் அவர்கள் ஆஜராகியும், 1ம்

பிரதிவாதி அசல் வழக்கு நிலுவையில் இருந்தபோது இறந்துவிட்ட நிலையிலும், இருதரப்பு வாதுரைகளுக்கு போதிய வாய்ப்பளித்தும், மனு, எதிருரை மற்றும் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

அசல் வழக்கின் பிராது, பிராதின் பரிகாரம் மற்றும் நீதிமன்ற கட்டணத்தில் சீர்திருத்தம் செய்யவேண்டி இம்மனுவானது மனுதாரர்கள்/வாதிகளால் கட்டளை 6 விதி 17 மற்றும் பிரிவு 151ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேலும், மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தங்களது மனுவினை நிரூபணம் செய்யும்பொருட்டு கீழ்க்கண்ட மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற முன்தீர்ப்பானது முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது.

**M.Mohan**

**Vs.,**

**G.Janarthanan**

**CRP No.1858/2024**

**and**

**CMP No.9777/2024**

**dated:12.09.2025**

2) எதிர்மனுதாரர்/பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிருரையில், மனுதாரர்/வாதிகள் தரப்பு இந்நிர் இடைநிலை மனுவினை அனுமதிக்கக்கூடாது என்று ஆட்சேபனை தெரிவித்துள்ளார்கள்.

**3. தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா என்பதேயாகும்.**

3.1) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் யாவும் பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாதிகளால் பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளதாக கூறப்பட்டுள்ளது. மேற்படி இந்த இடைநிலை மனுவானது அசல் வழக்கின் பிராது, பிராதின் பரிகாரங்கள் மற்றும் நீதிமன்ற கட்டணத்தில் சீர்திருத்தம் செய்யவேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3.2) மேலும், மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள

**சீர்திருத்த மனுவில் கீழ்க்கண்ட சீர்திருத்தங்களை மேற்கொள்ளவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.**

1) In the plaint prayer column in relief 'A' before the words granting permanent injunction insert the same as follows:

"To declare that the A schedule property is the absolute property of the 1st plaintiff and consequently"

2) In the plaint prayer column in relief 'B' before the words granting permanent injunction insert the same as follows:

"To declare that the B schedule property is the absolute property of the 2nd plaintiff and consequently" **என்றும்,**

**வழக்குச்சொத்தின் அ பரிகாரத்தின் மதிப்பை ரூ.1,000/-லிருந்து ரூ.4,33,657/- என்றும், அதற்கான நீதிமன்ற கட்டணத்தை ரூ.75.50/-லிருந்து, ரூ.13,010/- ஆக சீர்திருத்தம் செய்யவேண்டும் என்றும், வழக்குச்சொத்தின் ஆ பரிகாரத்தின் மதிப்பை ரூ.1,000/-லிருந்து ரூ.4,15,835/- என்றும், அதற்கான நீதிமன்ற கட்டணத்தை ரூ.75.50/-லிருந்து, ரூ.12,476/- ஆக சீர்திருத்தம் செய்யவேண்டும் என்றும், ஆக மொத்தம் வழக்குச்சொத்தின் மொத்த மதிப்பு ரூ.8,49,492/- ஆகவும்,**

அதற்கான நீதிமன்ற கட்டணத்தை ரூ.25,486/− ஆகவும் சீர்திருத்தம் செய்யவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

3.3) மனுதாரர்கள்/வாதிகளின் இந்நிர் இடைநிலை மனுவில் கோரப்பட்டுள்ள சீர்திருத்தங்கள் மேற்கொள்வது பற்றி பரிசீலிக்கையில், மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில், தாவாச்சொத்தில் உள்ள வாதிகளின் உரிமையை பிரதிவாதிகள் தீவிரமாக மறுத்துள்ள காரணத்தாலும், வாதிகள் விளம்புகை பரிகாரம் கோராமல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரியுள்ளதால் அசல் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று கூறியுள்ள காரணத்தாலும், அசல் வழக்கின் விசாரணையின்போது எந்தவொரு சட்டப்படியான பிரச்சனையும் ஏற்படக்கூடாது என்ற காரணத்தாலும் அசல் வழக்கில் விளம்புகை பரிகாரம் கோரவேண்டியது அவசியம் என்றும் குறிப்பிட்டுள்ள வாதத்தினை கருத்தில்கொண்டும், மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற முன்தீர்ப்பில் கூறப்பட்டுள்ள வழிகாட்டுதலின்படி அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், இந்நிர் சீர்திருத்தங்களால் அசல் வழக்கின் தன்மை மாற்றப்பட்டாலும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்துடன் சேர்த்து கோரப்படும்

விளம்புகை பரிகாரம் என்பது தாவாச்சொத்து சம்பந்தமான மாற்றமாக இருப்பதால் மேற்படி மனுதாரர்கள்/வாதிகள் கோரியுள்ள சீர்திருத்த பரிகாரமானது சட்டப்படியானது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

3.4) மேலும், வழக்குத்தரப்பினர்களுக்கு இடையே உள்ள பிரச்சனையை முழுமையாக தீர்வு காண்பதற்கு மேற்படி சீர்திருத்தங்கள் அவசியமானதாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது. மேலும், மேற்படி சீர்திருத்த மனுவில் கண்டுள்ளவாறு சீர்திருத்தம் செய்யும்பட்சத்தில் தரப்பினர்களுக்கு எவருக்கும் பாதகமோ சாதகமோ ஏற்படாது என்பதை கருத்தில்கொண்டும், தரப்பினர்களுக்கு இடையே பல வழக்குகள் தாக்கல் செய்வதை தவிர்க்கும்விதமாகவும் மேற்படி சீர்திருத்தமானது அவசியமானது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்தும், மேற்படி சீர்திருத்தங்களானது அவசியமானது மற்றும் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்றும், எனவே, மனுதாரர்கள்/வாதிகளின் மனுவில் கண்டவாறு சீர்திருத்தங்கள் செய்வது சட்டப்படியானது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**முடிவாக,** மனுதாரர்கள்/வாதிகளின் இம்மனுவானது அனுமதித்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு இந்த திறந்த நீதிமன்ற அவையில் 2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.02.12 17:14:44 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

**இணைப்பு: –**

சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இருதரப்பிலும் தாக்கல் இல்லை.

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.02.12 17:14:52 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.04/2025
இன்
அசல் வழக்கு எண்.39/2018
வரைவு/செவ்வை உத்தரவு
நாள்: 12.02.2026